Edubilla.com
Global Education Needz

**Sl. No. :** 30015101 **SSHR**

பதிவு எண் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# 2013

# இந்து மதம்–சைவமும், வைணவமும்

# (SSLC Standard)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. **எல்லா வினாக்களுக்கும்** விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் [B] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

SEAL

---

A

www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

1. ஆலயத்தை 5 முறை வலம் வந்தால் ஏற்படும் பலன்

(A) காரியம் நிறைவேறும்

(B) மக்கட் செல்வம் ஏற்படும்

(C) செல்வம் பெருகும்

(D) நினைத்தது நடக்கும்

2. 'பஞ்ச பத்ரம்' எனப்படுபவை

(A) துளசி, அருகு, வேம்பு, வன்னி, வில்வம்

(B) துளசி, அருகு, வேம்பு, வன்னி, ஆலஇலை

(C) துளசி, அருகு, வேம்பு, வன்னி, அரச இலை

(D) துளசி, அருகு, வேம்பு, வன்னி, முருங்கை

3. மனிதனின் ஆக்ஞை எனப்படுவது

(A) தலை

(B) கழுத்து

(C) பிடரி

(D) வயிறு

4. கீழ்காணும் பட்டியல் Iல் உள்ள மூலமந்திரங்களை பட்டியல் IIல் உள்ள இறைவனோடு பொருத்துக

| | மூலமந்திரம் | | இறைவன் |
|---|---|---|---|
| (a) | ஓம் நமசிவாய | 1. | முருகன் |
| (b) | ஓம் நமோ நாராயணா | 2. | தேவி |
| (c) | ஓம் உமா தேவ்யை நம | 3. | விஷ்ணு |
| (d) | ஓம் சரவண பவாய நம | 4. | சிவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

5. கீழ்காணும் பஞ்சபூதங்கள் மற்றும அதிதேவதை ஆகியவற்றை பொருத்துக :

| | பஞ்சபூதங்கள் | | அதிதேவதை |
|---|---|---|---|
| (a) | பிருதிவி | 1. | விஷ்ணு |
| (b) | அப்பு | 2. | மகேசுவரன் |
| (c) | தேயு | 3. | இராமன் |
| (d) | வாயு | 4. | சிவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

6. சிவபெருமானுக்குரிய ஒரு ஆயுதம்

(A) எரியகல்
(B) கதை
(C) கேடயம்
(D) சக்கரம்

7. தீக்கை செய்யும் முறையின் வகைகள்

(A) ஐந்து
(B) ஆறு
(C) ஏழு
(D) எட்டு

8. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத இணை எது?

(A) நயன தீக்கை – மீன் குஞ்சு பொறித்தல்
(B) வாசக தீக்கை – வாசனையால் வருவது
(C) ஸ்பரிச தீக்கை – கோழி அடைகாத்தல்
(D) மானத தீக்கை – ஆமை குஞ்சு பொரித்தல்

9. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | ஸ்பரிச தீக்கை | 1. | பார்வை |
| (b) | நயன தீக்கை | 2. | தொடுதல் |
| (c) | மனை தீக்கை | 3. | உபதேசம் |
| (d) | வாசக தீக்கை | 4. | நினைவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

10. ‘குலம் தரும் செல்வம் தந்திடும்’ எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்

(A) அப்பர்
(B) மெய்கண்டார்
(C) திருமூலர்
(D) திருமங்கை மன்னன்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

11. கோயில் திருப்பல்லாண்டு பாடலைப் பாடியவர்

(A) சேந்தனார்
(B) திருமாளிகைத் தேவர்
(C) சேதிராயர்
(D) புருடோத்தம நம்பி

12. போகிப் பண்டிகை கொண்டாடுவதின் நோக்கம்

(A) மார்கழி மாத இறுதி நாள் என்பதற்காக
(B) பழையவற்றை கழித்தல்
(C) மழைக் கொடுத்த இறைவனைப் போற்றுதல்
(D) தூய்மை அடையும் விதமாக

13. மகாசிவராத்திரி பண்டிகை எதன் நினைவாகக் கொண்டாடப்படுகிறது?

(A) பார்வதி சிவபெருமானின் திருமண நாளாக
(B) சிவபெருமான் அசுர வதம் செய்தமைக்காக
(C) சிவபெருமான் அவதாரம் எடுத்ததிற்காக
(D) பார்வதிக்கு சிவபெருமான் ஞானம் கற்றுக் கொடுத்த தினமாக

14. 'வசந்த நவராத்திரி' விழா எதன் பொருட்டு கொண்டாடப்படுகிறது?

(A) ஆண் தெய்வம் நினைவாக
(B) பெண் தெய்வம் நினைவாக
(C) வசந்த காலத்தைக் குறித்து
(D) அர்த்த நாரீஸ்வரரை நினைவிற் கொண்டு

15. 'ஸ்ரீ கிருஷ்ணாஷ்டமி' திருநாளை மற்றொரு பெயராலும் அழைக்கலாம்?

(A) ஜென்மாஷ்டமி
(B) பூர்வாஷ்டமி
(C) உத்ராஷ்டமி
(D) காலாஷ்டமி

16. மகிடாசூரன் கொல்லப்பட்டதின் நினைவாகக் கொண்டாடப்படும் பண்டிகை எது?

(A) தனுர்மாத நவராத்திரி
(B) சரவண நவராத்திரி
(C) வசந்த நவராத்திரி
(D) சதுர்மாத நவராத்திரி

17. எந்த முனிவரின் நினைவாகக் 'குரு பூர்ணிமா' கொண்டாடப்படுகிறது?

(A) வேத வியாஸர்
(B) அகத்திய முனிவர்
(C) சனகர்
(D) யக்ஞவல்கியர்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

18. இவற்றில் எது முக்குண புராணம் என்று குறிப்பிடப்படுகிறது?

I. மத்ஸ்ய புராணம், கூர்ம புராணம், கந்த புராணம்

II. சாத்வீகப் புராணம், இராஜஸபுராணம், தாமஸ புராணம்

(A) I மட்டும் சரி
(B) II மட்டும் சரி
(C) Iம் IIம் சரி
(D) இவற்றில் எதுவுமில்லை

19. இதிகாசத்தில் அமைந்துள்ள கருப்பொருள்

(A) பகவத்கீதை செய்திகள்
(B) உபநிடதக் கருத்துக்கள்
(C) ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு
(D) இவற்றில் எதுவுமில்லை

20. இதிகாசங்களின் சுவை என்ன?

(A) துரியோதனன் நேர்மையாக கதை யுத்தம் செய்தான்
(B) இராமாயணத்தில் வாலியை மறைந்து நின்று இராமர் அடித்தது
(C) பீமன் சண்டையில் தப்பு செய்தது
(D) இவற்றில் எதுவுமில்லை

21. அர்த்த பஞ்சகம் என்பது

1. அடையத்தக்க பிரம்ம ஸ்வரூபம், அடைகிறவனான பிரத்யகாத்மா ஸ்வரூபம், அடைய உதவும் வழிமுறை, அடைவதால் உண்டாகும் நலம், அடைவதற்கு தடையான விலக்கப்பட வேண்டியவை

2. பிரத்யகாத்மா ஸ்வரூபம், அடைய வேண்டிய பொருள், சத்யமானது, பெருமை உடையது, இறைவனை அடைவது

இவற்றில் எந்த கூற்று சரியானது?

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) 1ம் 2ம் சரி
(D) இவற்றில் எதுவுமில்லை

22. பின்வருவனவற்றுள் வேதம் எதைச் சார்ந்த நூல்?

(A) இலக்கண நூல்
(B) அறிவு நூல்
(C) இலக்கிய நூல்
(D) நீதி நூல்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

23. இராமானுஜர் கூறும் பேதங்களின் எண்ணிக்கை

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

24. பிரம்ம சூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய உரை இவ்வாறு அழைக்கப்படும்?

(A) மாண்டூக்ய காரிகை
(B) ஸ்ரீ பாஷ்யம்
(C) சர்வதரிசனசங்கிரகம்
(D) யோக சூத்திரம்

25. பிரம்மம் மட்டுமே உண்மை என்றும் உலகம் ஒரு மாயத் தோற்றம் என்றும் கூறியவர்

(A) வல்லபர்
(B) இராமானுஜர்
(C) மாத்வர்
(D) சங்கரர்

26. சங்கரரது தத்துவம் இவ்வாறு அழைக்கப்படும்?

(A) துவைதம்
(B) அத்வைதம்
(C) விசிட்டாத்வைதம்
(D) சைவ சித்தாந்தம்

27. வைகாசி விசாக நாள் எந்த கடவுளின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது?

(A) விநாயகர்
(B) நடராஜர்
(C) முருகன்
(D) விஷ்ணு

28. வெள்ளைநிற வடிவினள்

(A) இலட்சுமி
(B) பார்வதி
(C) கலைமகள்
(D) காளி

29. சஷ்டி நோன்பு முறையில் குரோதத்தை விழாத் தத்துவமாக காட்டுபவர்

(A) சிங்கமுகன்
(B) முருகன்
(C) கஜமுகி
(D) தாரகன்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

30. வடக்கத்திய வடிவமைப்பும் தெற்கத்திய வடிவமைப்பும் கலந்த கட்டிடக்கலை வடிவமைப்பின் பெயர்

(A) நாகரம்
(B) வேசரம்
(C) திராவிடம்
(D) பாசரம்

31. வேதங்களை ஓதிய முறை

1. ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டது
2. குரு சீட முறையில் ஒருவர் சொல்ல மற்றவர் கேட்டு மனனம் செய்யப்பட்டு வாய்மொழியில் வந்தது

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு

32. வேதங்களில் உபநிஷதத்துடன் கூடிய மற்றும் பிற பிரிவுகள்

(A) சம்ஹிதை
(B) பிராம்மணம்
(C) ஆரண்யம்
(D) மேற்கூறிய மூன்றையும்

33. இறைவனது ஐந்து முகங்களில் இருந்து தோன்றிய ஆகமங்களின் எண்ணிக்கை

(1) 18
(2) 24
(3) 26
(4) 28

(A) (1)-ம் சரி
(B) (2)-மட்டும் சரி
(C) (3)-மட்டும் சரி
(D) (4)-மட்டும் சரி

34. ஆகமங்களில் தச காரியங்களுக்கு இலக்கணம் கூறப்பட்ட பாதங்களின் பெயர்கள்

(1) சரியா, கிரியா பாதங்கள்
(2) சரியா, கிரியா, யோக பாதங்கள்
(3) ஞான பாதம்
(4) சரியா, கிரியா, யோக, ஞானா பாதங்கள்

(A) 1-மட்டும் சரி
(B) 2-மட்டும் சரி
(C) 3-மட்டும் சரி
(D) 4-மட்டும் சரி



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

35. பௌத்த சமயத்தின் மத்தியாமிகா வகுப்பின் நிறுவனர்

(A) புத்தர்
(B) ரிஷபர்
(C) வர்த்தமானர்
(D) நாகார்சுனா

36. சத்காரிய வாதத்தின் இரு வேறு வகைகள்

(A) பரிணாம வாதம், விவர்த்தவாதம்
(B) பரிணாம வாதம், அநேகாந்த வாதம்
(C) பரிணாம வாதம், சூன்ய வாதம்
(D) அநேகாந்த வாதம், சூன்ய வாதம்

37. எந்த தெய்வத்தை எத்தனை முறை சுற்றலாம்? சரியான இணையைத் தேர்க

I. விநாயகர் - ஒரு சுற்று
II. சூரியன் - மூன்று சுற்று
III. சிவன் - நான்கு சுற்று
IV. அம்பாள் - ஐந்து சுற்று

(A) I சரியானது
(B) II சரியானது
(C) III சரியானது
(D) IV சரியானது

38. விநாயகரின் ஆயுதங்கள் எத்தனை?

I. 29
II. 30
III. 5
IV. 12

(A) I சரியானது 29
(B) II சரியானது 30
(C) III சரியானது 5
(D) IV சரியானது 12

39. ராமேஸ்வரத்தில் உள்ள உபதீர்த்தங்களின் எண்ணிக்கை

(A) 27
(B) 28
(C) 30
(D) 29


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

40. ருத்ராட்சையின் பிற பெயர்கள்: எது சரியானது

I. ருத்திரமணி, தெய்வமணி, ஜெபமணி

II. சிவமணி, சிரமணி, அக்குமணி

III. அக்கமணி, அட்சமணி, விழி மணி

IV. கண்மணி, புனிதமாமணி, கண்டிகை

(A) I மட்டும் சரியானது
(B) II, III சரியானது
(C) IV மட்டும் சரியானது
(D) I, II, III, IV சரியானது

41. கீழே கொடுக்கப்பட்டுள்ளதை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்யவும் :

(a) தாஸ மார்க்கம் — 1. ஞானம்

(b) சற்புத்திரமார்க்கம் — 2. சரியை

(c) சக மார்க்கம் — 3. யோகம்

(d) சன் மார்க்கம் — 4. கிரியை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

42. பொருத்துக :

(a) ஆவாஹனம் — 1. கற்பூரம் காட்டுதல்

(b) பாத்தியம் — 2. திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல்

(c) ஆசமனம் — 3. அருந்த தண்ணீர் கொடுத்தல்

(d) நீராஞ்சனம் — 4. இறைவனை அழைத்தல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

43. "அவர் தியான சித்தர்" என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் யாரை கூறினார்

(A) ஸ்ரீ அர்விந்தரை
(B) சுவாமி விவேகானந்தரை
(C) இராமலிங்க அடிகளாரை
(D) பாம்பன் சுவாமிகளை

44. "எவரும் என்னை வணங்க வேண்டாம்" என்று கூறியவர்

(A) பாம்பன் சுவாமிகள்
(B) தாயுமான சுவாமிகள்
(C) குமரகுரு சுவாமிகள்
(D) ஆனந்த சுவாமிகள்

45. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர்

(A) சுபேந்திரர்
(B) நரேந்திரர்
(C) விசுவநாதர்
(D) தின்மயானந்தர்

46. சோடசோபசாரங்கள் என்பது

I. பூஜையில் செய்யப்படும் 18 உபசாரங்களாகும்
II. பூஜையில் செய்யப்படும் 16 உபசாரங்களாகும்
III. பூஜையில் செய்யப்படும் 12 உபசாரங்களாகும்
IV. பூஜையில் செய்யப்படும் 21 உபசாரங்களாகும்

(A) I சரியானவை
(B) II சரியானவை
(C) III சரியானவை
(D) IV சரியானவை

47. குரு மாணாக்கனை இறைவனோடு ஒன்ற வைக்கும் தீக்கையின் பெயர்

(A) மந்த்ர தீக்கை
(B) மானத தீக்கை
(C) வாசக தீக்கை
(D) யோக தீக்கை

48. யோக தரிசனத்தை தோற்றுவித்தவர்

(A) கபிலர்
(B) கௌதமர்
(C) பதஞ்சலி
(D) மத்வர்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

49. திருத்தொண்டர் புராணம் எழுதியவர்

(A) ஒட்டக்கூத்தர்

(B) திருமாளிகைத் தேவர்

(C) கோலூர்க்கிழார்

(D) சேக்கிழார்

50. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று பாடியவர்

(A) திருநாவுக்கரசர்

(B) திருஞான சம்பந்தர்

(C) சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(D) மாணிக்கவாசகர்

51. சரியானதைத் தேர்க

I. சரியை - தாசமார்க்கம்

II. கிரியை - சன்மார்க்கம்

III. யோகம் - சற்புத்திர மார்க்கம்

IV. ஞானம் - சக மார்க்கம்

(A) I & II

(B) II & III

(C) IV மட்டும்

(D) I மட்டும்

52. பின்வருவனவற்றுள் அந்தக்கரணத்தோடு தொடர்பற்றது

(A) மனம்

(B) சித்தம்

(C) புத்தி

(D) அகங்காரம்

53. 'சட்சு தீக்கை' என்பது

(A) பரிச தீக்கை

(B) நயன தீக்கை

(C) யோக தீக்கை

(D) வாசக தீக்கை

54. சைவசித்தாந்தக் கருத்துப்படி இறைவனின் யோக வடிவம் தருவது

(A) உலக இன்பம்

(B) ஞானம்

(C) துன்ப நீக்கம்

(D) மேற்காண் எதுவுமில்லை


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

55. “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”எனப்பாடியவர்

(A) திருநாவுக்கரசர்

(B) திருஞானசம்பந்தர்

(C) சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(D) திருமூல தேவர்

56. திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரத்தில் உள்ள செய்யுட்களின் எண்ணிக்கை

(A) 333 (B) 233

(C) 332 (D) 323

57. காரைக்காலம்மையார் தலையால் நடந்து பேறுபெற்ற திருத்தலம் எது?

(A) திருக்கச்சி (B) திருவல்லம்

(C) திருவாலங்காடு (D) திருவிற்கோலம்

58. ‘திருக்கோவையார்’ என்ற நூலை இயற்றியவர் யார்?

(A) சேரமான் பெருமாள் (B) மாணிக்கவாசகர்

(C) நக்கீரர் (D) சேதிராயர்

59. “வான்முகில் வழாது பெய்க” என்ற வாழ்த்துப் பாடலை பாடியவர் யார்?

(A) அருணகிரி நாதர் (B) பாம்பன் சுவாமிகள்

(C) கச்சியப்ப சிவாச்சாரியார் (D) அபிராம பட்டர்

60. வாம்தேவ முகத்தினின்று தோன்றிய வேதம்

(A) சாமவேதம் (B) ரிக்வேதம்

(C) யஜீர் வேதம் (D) அதர்வண வேதம்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

61. ஆன்மா பிறவிகள் தோறும் செய்த வினைகளின் நிலைக்களம்

(A) பிராரப்தம் (B) சஞ்சிதம்

(C) ஆகமியம் (D) நிஷ்காமம்

62. பதி என்பதற்கு சிவம் என பொருள் கூறும் சமயம்

(A) கௌமாரம் (B) சாக்தம்

(C) வைணவம் (D) சைவம்

63. இருதயத்தை இடமாகக் கொண்டு நிகழும் அவத்தை

(A) சுழுத்தி (B) துரியம்

(C) துரியாதீதம் (D) சாக்கிம்

64. தாஸமார்க்கத்தால் அடையும் நிலை

(A) சாலோகம் (B) சாமீபம்

(C) சாரூபம் (D) சாயுஜ்ஜியம்

65. சன்மார்க்கத்தால் அடையும் நிலை

(A) சாலோகம் (B) சாமீபம்

(C) சாரூபம் (D) சாயுஜ்ஜியம்

66. சைவ சித்தாந்தத்தின் படி கீழ்கண்டவற்றில் ஒன்று அசத்து அல்ல

(A) ஆணவம் (B) கன்மம்

(C) மாயை (D) பதி

67. சைவ சித்தாந்தத்த கோட்பாட்டின்படி இவ்வுலகுக்கு மூலப்பொருளாயிருப்பது (material cause)

(A) பதி (B) மாயை

(C) பசு (D) பாசம்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

68. "பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி" என்ற பாடலை பாடியவர்

(A) திரு உந்தியார்
(B) திருமூலர்
(C) திருமங்கையாழ்வார்
(D) திருமலைச்சாரியார்

69. கீழ்கண்ட இணைகளில் எது பொருத்தமற்றது?

| | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| (A) | சிவஞானபோதம் | மெய்கண்டதேவர் |
| (B) | சிவபிரகாசம் | உமாபதி சிவசாரியார் |
| (C) | சிவஞான சித்தியார் | திருநற்றியார் |
| (D) | திருவந்தியார் | மணவாசகம் கடந்தார் |

70. ஆழ்வார்கள் பன்னிறுவர் எனில் முதலாழ்வார்கள் எனப்படுபவர்கள்

(A) பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
(B) திருமழிசை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வார்
(C) குலசேகராழ்வார், பெரியாழ்வர், ஆண்டாள்
(D) தொண்டர் அடிப் பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார்

71. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் ஆகிய மூவரும் ஸ்ரீ நாராயணனுடன் சந்தித்த திருத்தலம்

(A) ஸ்ரீரங்கம்
(B) திருவரங்கம்
(C) திருக்கோவிலூர்
(D) திருமழிசை

72. திருக்குறுங்குடி இறைவனின் அருளாள் அவதரித்த ஆழ்வார்

(A) குலசேகராழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) திருமங்கை ஆழ்வார்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

73. நான்முகனின் மகன்

(A) விநாயகர்
(B) முருகன்
(C) நாரதர்
(D) விஷ்ணு

74. பகவத்கீதை வலியுறுத்திக் கூறும் யோகம்

(A) கர்ம யோகம்
(B) ஞான யோகம்
(C) பக்தி யோகம்
(D) பிரபத்தி யோகம்

75. வாசுதேவன் என புகழப்படும் கடவுள்

(A) சிவன்
(B) திருமால்
(C) பிரம்மன்
(D) கணபதி

76. பகவத் கீதையின் அறக் கோட்பாடு

(A) சுவதர்மம்
(B) பிதிர் கர்மம்
(C) கர்ம யோகம்
(D) நிஷ்காம கர்மம்

77. கிருஷ்ண பரமாத்மாவின் ஏழாவது அவதாரம்

(A) ராமர் அவதாரம்
(B) பலராமர் அவதாரம்
(C) கிருஷ்ணர் அவதாரம்
(D) பரசுராமர் அவதாரம்

78. விஷ்ணு பகவானின் பத்தாவது அவதாரம்

(A) பரசுராம அவதாரம்
(B) ராம அவதாரம்
(C) கிருஷ்ண அவதாரம்
(D) கல்கி அவதாரம்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

79. ஆண்டாள் எந்த ஊரில் பிறந்தார்

(A) சென்னை

(B) ஸ்ரீவில்லிபுத்தூர்

(C) ஸ்ரீரங்கம்

(D) கும்பகோணம்

80. இராமானுஜரின் கருத்தின் படி இறைவனின் முப்பெறும் நிலைகள்

I. சித்

II. அசித்

III. ஈச்வரா

IV. மாயை

(A) I மட்டும் சரியானது

(B) I மற்றும் II மட்டும் சரியானது

(C) I மற்றும் IV மட்டும் சரியானது

(D) I, II மற்றும் III மட்டும் சரியானது

81. இராமானுஜரின் கருத்தின் படி உண்மையான அறிவு என்பது

(A) சாதாரண அறிவு

(B) உயர்ந்த பக்தி

(C) சார்பற்ற அறிவு

(D) வேதங்களின் அறிவு

82. இராமானுஜரின் கருத்தின் படி இறைவனுடன் உள்ளது

I. நற்குணங்கள்

II. சத், சித், ஆனந்தம்

III. அழகு

IV. அன்பு

(A) I மட்டும்

(B) I, II, III, IV ஆகிய அனைத்தும்

(C) II மட்டும்

(D) IV மட்டும்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

83. வைணவ மத வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்களை இப்படி அழைப்பர்

(A) ஆழ்வார்கள் (B) நாயன்மார்கள்

(C) சமணர்கள் (D) புத்தர்

84. ஆசாரியா என்ற சொல் குறிப்பது

I. பல்வேறு புத்தகங்களைப் படித்து தத்துவ அறிவை பெற்றவர்

II. அப்படி பெற்ற அறிவை மற்றவர்களுக்கு போதிப்பவர்

III. இந்த உலகைத் துறந்தவர்

(A) கூற்று I மட்டும் சரி (B) கூற்று I மற்றும் II சரி

(C) அனைத்து கூற்றுகளும் சரி (D) அனைத்து கூற்றுகளும் தவறு

85. திவ்விய தேசங்களில் ஒன்றான இமயத்துள் இருந்த திருப்பிரிதியைப் பாடியிருக்கும் ஒரே ஆழ்வார்

(A) இராமானுஜர் (B) திருமங்கையாழ்வார்

(C) பொய்கையாழ்வார் (D) பெரியாழ்வார்

86. யமுனாச்சார்யாவின் மறுபெயர்

(A) நம்மாழ்வார் (B) குலசேகர ஆழ்வார்

(C) ஆளவந்தார் (D) பெரியாழ்வார்

87. ஆளவந்தார் எழுதிய நூலின் பெயர்

(A) கீதார்த்தசஸ்கிரகா (B) நான்மணிமாலை

(C) நான்மணிக்கடிகை (D) புருஷார்த்தம்

88. ஆச்சார்யா என்பவர்

1. தத்துவ ஞானத்தை பெற்றவர்

2. சாஸ்திர விதிகளை பின்பற்றி அடுத்தவருக்கு உதவுபவர்

(A) 1 மட்டும் சரி (B) 2 மட்டும் சரி

(C) 1ம், 2ம் சரி (D) 1 வது சரி, 2வது தவறு



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

89. கீழ்க்கண்டவற்றில் எது சரியானது

1. ஆண்டாள் பிறந்த இடம் திருவில்லிப்புத்தூர்

2. ஆளவந்தார் பிறந்த இடம் வீரநாராயணபுரம்

3. திருப்பாணாழ்வார் பிறந்த இடம் திருமண்டங்குடி

(A) அனைத்தும் சரி

(B) 1 மட்டும் சரி

(C) 1 –ம், 2–ம் சரி

(D) 3 மட்டும் சரி

90. ஆண்டாளின் மறுபெயர்

(A) கோதை

(B) ராதை

(C) சீதை

(D) ருக்மணி

91. தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மந்திரத்தை மெல்ல உச்சரிப்பது

(A) வாசகம்

(B) மானஸம்

(C) மந்தம்

(D) அதமம்

92. கீழ்க்கண்டவர்களுள் வைஷ்ணவ ஆச்சாரியார் அல்லாதவர் எவர்?

(A) நாதமுனி

(B) யமுனாச்சாரியா

(C) நம்மாழ்வார்

(D) இராமானுஜர்

93. பல வகையான தீபங்களை கடவுள் முன்பாகக் காட்டுதலை இவ்வாறு அழைப்பர்

(A) ஆசமனீயம்

(B) அருக்கியம்

(C) புஷ்பதானம்

(D) ஆராத்திரிகம்

94. முக்தி அடைவதற்கு உரிய மார்க்கங்கள் மொத்தம்

(A) நான்கு

(B) எட்டு

(C) பனிரெண்டு

(D) பதினாறு



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

95. மும்மாயைகளில் இடம் பெறாதது

(A) பிரகிருதி மாயை
(B) அசுத்த மாயை
(C) ஆரிய மாயை
(D) சுத்த மாயை

96. இறைவன் அமைத்துள்ள எண்ணில்லாத அண்டங்கலும் பல்வேறு கண்டங்களும் இப்படி அழைக்கப்படுகின்றது

(A) போகம்
(B) புவனம்
(C) தனு
(D) கரணம்

97. 'காசி யாத்திரை' என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ஆனந்த சுவாமிகள்
(B) வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்
(C) குருபர சுவாமிகள்
(D) பாம்பன் சுவாமிகள்

98. இறைவனது உடலைப் பெற்று ஒத்த வடிவமாக இருந்து ஆனந்தத்தை அனுபவிக்கும் நிலைக்கு இப்பெயர் வழங்கப்படுகிறது

(A) சாலோக்கியம்
(B) சாமீப்பியம்
(C) சாரூப்பியம்
(D) சாயுஜ்யம்

99. அறிவுடையோர் குரு உபதேசத்தால் தெளிவடையும் தீக்கை பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது

(A) மானத தீக்கை
(B) வாசக தீக்கை
(C) மந்த்ர தீக்கை
(D) யோக தீக்கை

100. ஹீனோதீயம் என்னும் சொற்றொடரை பயன்படுத்தியவர்

(A) ஷேக்ஸ்பியர்
(B) மாக்ஸ் முல்லர்
(C) காரல் மாக்ஸ்
(D) லெனின்

101. சித்திரத் திருச்சபை எனப்படும் தலம்

(A) சிதம்பரம்
(B) திருக்குற்றாலம்
(C) திருவாரூர்
(D) திருவாலங்காடு

102. ஆலயத்தை 21 முறை வலம் வர கிடைக்கும் பலன்

(A) ஞானம்
(B) மனமகிழ்ச்சி
(C) வீடுபேறு
(D) செல்வம்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

103. 'உத்திஷ்ட பிரம்ம ணஸ்பதே' என்ற மந்திரம் எந்த சேவைக்கு உச்சரிக்கப்படுகிறது?

(A) குளியலுக்கு அமர்த்தல்
(B) குளியலுக்கு அழைத்தல்
(C) எண்ணெய் பூசுதல்
(D) மஞ்சள் பூசுதல்

104. கோயிலினுள் இருக்கும் மூன்று பிரகாரங்கள் உணர்த்துவது

(A) அன்னமயம், பிராணமயம், மனோமயம்
(B) விஞ்ஞானமயம், ஆனந்தமயம், மனோமயம்
(C) விஞ்ஞானமயம், அன்னமயம், ஆனந்தமயம்
(D) அன்னமயம், ஆனந்தமயம், மனோமயம்

105. கல்லால் செய்யப்பட்ட லிங்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) இரத்னஜம்
(B) லோகஜம்
(C) சைலஜம்
(D) க்ஷணிகம்

106. மாயமத வாஸ்து சாஸ்திரம் என்ற நூலை எழுதியவர் யார்?

(A) நரசிம்மவர்மன்
(B) மாமல்லன்
(C) பிரம்மரிஷி மாயன்
(D) சாணக்கியன்

107. சரபேஸ்வரர் திருமேனி எந்த வடிவத்தில் உள்ளது?

(A) பறவை
(B) புலி
(C) சிங்கம்
(D) மனிதன்

108. ஆண் விக்ரகங்களைச் செய்ய ஏற்ற கல் எது?

(A) ஆண் கல்
(B) பெண் கல்
(C) நபும்ஸகக் கல்
(D) மேற்கண்டயாவும்

109. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?

(A) 3
(B) 5
(C) 7
(D) 9


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

110. இவற்றில் சரியாகப் பொருந்தாத இணை எது?

(A) மனிதர் – ஒன்பது லட்சம் பேதம்
(B) விலங்கு – பத்து லட்சம் பேதம்
(C) தாவரம் – பதினொரு லட்சம் பேதம்
(D) ஊர்வன – பதினைந்து லட்சம் பேதம்

111. பிந்து அல்லது பரம அணுக்கள் எந்த சக்தியால் அடங்கியுள்ளன?

(A) காற்று
(B) நீர்
(C) ஆகாயம்
(D) நிலம்

112. உயிர்களை நல்வினை செய்யவொட்டாது தடுக்கும் தடையின் பெயர்

(A) கன்மம்
(B) பாசம்
(C) ஆணவம்
(D) மாயை

113. இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்கும் நிலையின் பெயர்

(A) கேவலாவத்தை
(B) சுத்தாவத்தை
(C) சகலாவத்தை
(D) மலபரிபாகம்

114. "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காண்" என உடம்பு பற்றி பாடியவர்

(A) திருமூலர்
(B) அப்பர்
(C) ஔவையார்
(D) மெய்கண்டார்

115. உயிர்களின் எழுவகைப் பிறப்புகளில் பதினைந்து இலட்சம் பேதங்களைக் கொண்டது

(A) நீர்வாழ்வன
(B) ஊர்வன
(C) பறவை
(D) விலங்கு

116. நால்வகைத் தோற்றமான உயிர் வர்க்கத்தில் சராயுஜம் என்றழைக்கப்படுவது

(A) தாவரங்கள்
(B) வேர்வையில் தோன்றுவன
(C) கருப்பையில் தோன்றுவன
(D) முட்டையில் தோன்றுவன



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

117. சௌசம் என்பது எதைக் குறிக்கிறது?

(A) உடல் வருத்தங்களை சகித்துக் கொள்ளுதல்

(B) தத்துவங்களைப் படித்தல்

(C) உடல், மன, மொழித் தூய்மை அழுக்கில்லாமலிருத்தல்

(D) ஏக்கம் இல்லாத நிலை

118. சூத்திரங்களில் முதன்மையான சூத்திரம் எது?

(A) நியாய சூத்திரம்

(B) வைஷேஷிக சூத்திரம்

(C) பிரம்ம சூத்திரம்

(D) சாங்கிய காரிகை

119. கீழ்கண்ட உரைகளை ஆய்க

1. பஞ்ச பூதங்கள் : நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம்

2. பஞ்ச பூத சுபாவங்கள் ; தோற்றம், தொடுகை, சப்தம், வாசனை, சுவை

எந்த உரை/உரைகள் சரியானது?

(A) 1 மட்டும் சரி

(B) 2 மட்டும் சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் சரியில்லை

120. வைசேஷிகத் தரிசனத்தை தோற்றுவித்தவர்

(A) கௌதமர்

(B) திருஞான சம்பந்தர்

(C) கணாதர்

(D) கபிலர்

121. "ஓம் பூர் புவர்ஸுவஹ தத்சவிதுர் வரேணியம் பர்கோ தேவஸ்ய தீமஹி–தியோனப் பிரசோதயாத்" என்பது பின்வருவனவற்றுள் எதில் இடம் பெறுகிறது?

(A) கந்தர் புராணம்

(B) கந்த ஷஷ்டி கவசம்

(C) காயத்ரி மந்திரம்

(D) இவற்றில் எதுவுமில்லை

122. கிருஷ்ணை என்பது யாரைக் குறிப்பிடுகிறது?

(A) சீதை

(B) திரௌபதி

(C) குந்தி தேவி

(D) கூனி



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

123. சாத்திரம் என்பது

(A) அறிவு நெறியை விளக்கிக் காட்டுவது
(B) மந்திரங்களை ஓதுவது
(C) ஒழுக்க நெறிகளை கூறுவது
(D) புகழை சொல்லுவது

124. புறநானூற்றில் சிவபெருமானை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்?

(A) திரிபுராந்தக மூர்த்தி
(B) அர்த்த நாரீசுவர மூர்த்தி
(C) கங்காதரமூர்த்தி
(D) தட்சிணாமூர்த்தி

125. துவைதத் தத்துவத்தில் பிழைக் கோட்பாட்டினை பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது?

(A) சத்கியாதி
(B) அசத்கியாதி
(C) அபிநவ அன்யதாகியாதி
(D) அநிர்வசனீயகியாதி

126. சிவபிரான் பிரமனுடைய தலையைக் கொய்து செருக்கழித்த தலம்

(A) திருக்கோவலூர்
(B) திருக்கண்டியூர்
(C) திருவிற்குடி
(D) திருவதிகை

127. பேதங்களை அடிப்படையாகக் கொண்டு மாத்வர் அளித்த தத்துவம் இவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) அத்வைதம்
(B) விசிட்டாத்வைதம்
(C) துவைதம்
(D) சைவ சித்தாந்தம்

128. பாஞ்சராத்ர கருத்தாக்கத்தை வலியுறுத்தியவர்

(A) சங்கரர்
(B) இராமானுஜர்
(C) மாத்வர்
(D) வல்லபர்

129. படைப்பின் பொழுது சூக்கும வடிவிலுள்ள நிலம், நீர் காற்று ஆகிய மூன்றும் குணங்களைப் பெற்று பருப்பொருள்களாக உருப்பெறும் பொழுது அவற்றிற்கு வழங்கப்படும் பெயர்

(A) திரிவர்க்கம்
(B) திரைரத்தினம்
(C) திரிபிடகம்
(D) திரிவிரித்கரணம்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

130. பங்குனி உத்திர விழா எந்த ஊரில் மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது?

(A) சென்னை (B) திருச்செந்தூர்

(C) திருவாரூர் (D) மதுரை

131. திருவரங்கத்தின் தல விருட்சம்

(A) புன்னை மரம் (B) மருதம் மரம்

(C) வில்வ மரம் (D) களா மரம்

132. சிதம்பர கோயிலின் தல விருட்சம் எது?

(A) வில்வ மரம் (B) புன்னை

(C) வேம்பு (D) மருதம்

133. குடமுழுக்கிற்கு பிறகு ஆச்சரியர், எஜமானர், ஸ்தபதி மற்றும் உதவியாளர்கள் புனித நீராடுவார்கள் இந்த சடங்கை இவ்வாறு அழைப்பர்

(A) அவப்ரத ஸ்நானம் (B) கங்கா ஸ்நானம்

(C) குட ஸ்நானம் (D) அவத ஸ்நானம்

134. கோவில் எழுப்பும் பொழுது செயப்படும் அங்குரார்ப்பணம் என்ற சடங்கு எதை குறிக்கும்?

(A) அடிப்பீட கல் வைப்பது (B) நிலத்தை புனிதப்படுத்துவது

(C) பயிர் விதைகளை முளைக்க விடுவது (D) அடிக்கல் நாட்டுவது

135. சரியாக பொருத்துக

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | ஸ்தபதி | 1. | சிற்பி |
| (b) | சுத்ரக்ராஹின் | 2. | கொத்தனார் |
| (c) | வர்தகின் | 3. | தலைமைச் சிற்பி |
| (d) | தட்சகர் | 4. | வரைபட நிபுணர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 3 | 2 | 1 | 4 |



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

136. வேதத்தின் 'கர்ம காண்டம்' பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது

(A) மந்திரங்கள், ஆரண்யகாஸ்

(B) மந்திரங்கள், பிராமனாஸ், ஆரண்யகாஸ்

(C) மந்திரங்கள், பிராமனாஸ்

(D) மந்திரங்கள், பிராமனாஸ், சம்ஹிதாஸ், ஆரண்யகாஸ்

137. 'நீ அதுவாகிராய்' என்னும் உபநிடத வாக்கு பின்வருபவர்களின் உரையாடல் மூலம் ஏற்பட்டது

(A) இந்திரா, வருணா

(B) உதலகா, சுவேதகேது

(C) உதலகா, இந்திரா

(D) சுவேத கேது, இந்திரா

138. சமணர் வலியுறுத்திக் கூறும் சீலங்கள்

(A) மகாவிரதம்

(B) அனுவிரதம்

(C) மகாவிரதம், அனுவிரதம்

(D) மகாவிரதம், அனுவிரதம், சம்யஞ்ஞானம்

139. சார்வாகம் ஒத்துக் கொள்ளும் பிராமணங்கள்

(A) புலன் அறிவு மட்டும்

(B) புலன் அறிவு , அனுமானம் மட்டும்

(C) அனுமானம், ஒப்பீடு மட்டும்

(D) அனுமானம் மட்டும்

140. சமண தீர்த்தங்கர்களின் மொத்த எண்ணிக்கை

(A) 20 தீர்த்தங்கர்கள்

(B) 22 தீர்த்தங்கர்கள்

(C) 24 தீர்த்தங்கர்கள்

(D) 26 தீர்த்தங்கர்கள்

141. புத்தரின் நான்கு உன்னத உண்மைகள் பின்வருமாறு வரிசைப்படுத்தப் படுகின்றது

(A) துக்கம், துக்கக் காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண வழி

(B) துக்கக் காரணம், துக்கம், துக்க நிவாரண வழி, துக்க நிவாரணம்

(C) துக்கம், துக்கக் காரணம், துக்க நிவாரண வழி, துக்க நிவாரணம்

(D) துக்கக் காரணம், துக்கம், துக்க நிவாரணம், துக்க நிவாரண வழி



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

142. கீழ்கண்ட அட்டவணை I ல் அட்டவணை II உடன் இணைத்து தீர்வு காண்க

| அட்டவணை I (சிவமூர்த்தி) | | அட்டவணை II (தோற்றம்) |
|---|---|---|
| (a) பைரவர் | 1. | அமைதி தோற்றம் |
| (b) தட்சிணாமூர்த்தி | 2. | கருணைத் தோற்றம் |
| (c) பிட்சாடனர் | 3. | வசீகரத் தோற்றம் |
| (d) சோமாஸ்கந்தர் | 4. | உக்கிரத் தோற்றம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

143. இவற்றுள் எது சரி?

கோயிலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்

I. தேவக்கிரகம், தேவாகாரம், தேவாயதனம்

II. தேவாலயம், தேவமந்திர், தேவஸ்தானம்

III. அர்ச்சாகிரகம், கோஷ்டம், திருக்கோவில்

IV. சன்னதி, ஆலயம், சிரவணம்

(A) I, II, III சரியானது
(B) I, IV சரியானது
(C) III, IV சரியானது
(D) I, II, III, IV சரியானது

144. கோவில் திருவிழாவின் போது கொடியேற்றம் செய்வது கீழ்கண்ட காரணங்களுக்காக. சரியா? தவறா?

I. கொடியேற்றம் குண்டலினி சக்தியை மேலெழுப்பும் யோக தத்துவத்தை உணர்த்துவதற்காக

II. மனிதனின் எண்ணங்கள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும் என்பதையும்

III. அக்னி தேவதைக்காக கொடியேற்றம் செய்யப்படுகின்றன

IV. உற்சவங்கள் நடைபெறுவதற்காகவும்

(A) I, III, IV சரியானவை
(B) I, II, IV சரியானவை
(C) I, II, III சரியானவை
(D) I, II, IV தவறானவை


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

145. பொருத்துக

நவக்கிரகங்கள் பதவிகள்

| நவக்கிரகங்கள் | | | பதவிகள் |
|---|---|---|---|
| (a) | புதன் | 1. | மதியூக மந்திரி |
| (b) | சுக்கிரன் | 2. | படைகளின் பாதுகாவலன் |
| (c) | அங்காரகன் | 3. | இளவரசர் |
| (d) | சனி | 4. | சேனாதிபதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

146. கீழ்கண்டவற்றில் எது தவறு

| | விளக்கு | | பலன் |
|---|---|---|---|
| I. | குத்து விளக்கில் இரு முகம் ஏற்றினால் | 1. | குடும்ப ஒற்றுமை ஏற்படும் |
| II. | மும்முகம் ஏற்றினால் | 2. | புத்திரசுகம், கல்வி, கேள்விகளில் விருத்தி உண்டாகாது |
| III. | நான்கு முகம் ஏற்றினால் | 3. | பசு,பால்,பூமி சேர்க்கை உண்டாகும் |
| IV. | ஐந்து முகம் ஏற்றினால் | 4. | சர்வ பீடை நிவர்த்தி, ஐஸ்வர்ய லட்சுமி கடாச்சம் ஆகியவை பெருகும் |

(A) I தவறானது
(B) II தவறானது
(C) III தவறானது
(D) IV தவறானது

147. சுவாமி விவேகானந்தர் பிறந்த ஆண்டு

(A) 1873
(B) 1863
(C) 1883
(D) 1853

148. "எல்லா மதங்களும் உண்மை; எத்தனை மதங்களோ அத்தனை வழிகள்" என்று கூறியவர்

(A) இராமலிங்க அடிகளார்
(B) சுவாமி விவேகானந்தர்
(C) இராமகிருஷ்ண பரமஹம்சர்
(D) ஸ்ரீ அரவிந்தர்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

149. வேனில் விழா என்று அழைக்கப்படும் திருவிழா

(A) ஆடிப் பெருக்கு

(B) திருவோணப் பண்டிகை

(C) விசாகத் திருவிழா

(D) கோகுலாஷ்டமி

150. "உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த்தேனே" என கூறியவர்

(A) சேக்கிழார்

(B) மணிவாசகர்

(C) சுந்தரர்

(D) திருமூலர்

151. காஞ்சிப்புராணத்தை இயற்றியவர்

(A) மெய்கண்டார்

(B) அருணந்தி சிவம்

(C) கச்சியப்ப முனிவர்

(D) சிவஞான யோகி

152. "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என அருளியவர்

(A) திருஞான சம்மந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

153. திருமந்திர ஒன்பதாம் தந்திரம் கொண்டுள்ள திருப்பாட்டுக்கள்

(A) 333

(B) 232

(C) 400

(D) 500

154. பின்வருவோருள் சமயக்குரவர் அல்லாதார் யாவர்?

I. நம்பி ஆரூரர்

II. மெய்கண்ட தேவநாயனார்

III. சுந்தரமூர்த்தி சுவாமிகள்

IV. திருமூல தேவநாயனார்

(A) I மட்டும்

(B) II மட்டும்

(C) II & IV

(D) I & III


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

155. பதியின் சிறப்பியல்பு எனப்படுவது

(A) சாமான்ய இலக்கணம்
(B) சொரூப இலக்கணம்
(C) தடத்த இலக்கணம்
(D) ஞான இலக்கணம்

156. சித்தாந்த சாத்திரங்களுள் மிகப் பெரிய நூல்

(A) சிவஞான போதம்
(B) சிவஞான சித்தியார்
(C) உண்மை விளக்கம்
(D) உண்மை நெறி விளக்கம்

157. பொருந்தா இணைகளைத் தேர்க

| | வடசொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| I. | சிருஷ்டி | - | படைத்தல் |
| II. | ஸ்திதி | - | அழித்தல் |
| III. | சம்ஹாரம் | - | காத்தல் |
| IV. | திரோபவம் | - | அருளல் |

(A) I & IV
(B) I & II
(C) I & III
(D) II, III & IV

158. "ஐம்பொறிகளே உயிர்" என வாதிடுவோர்

(A) தேகான்ம வாதிகள்
(B) சூக்கும தேகான்ம வாதிகள்
(C) இந்திரிய வாதிகள்
(D) சூனிய வாதிகள்

159. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் மூலமலம்

(A) கன்மம்
(B) மாயை
(C) ஆணவம்
(D) அசுத்த மாயை

160. முதல் மூன்று தேவாரங்களை அருளிச் செய்தவர்

(A) திருநாவுக்கரசர்
(B) திருமாளிகைத் தேவர்
(C) திருஞானசம்பந்தர்
(D) சுந்தரமூர்த்தி சுவாமிகள்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

161. சிவபெருமானின் சத்யோகாத முகத்தினின்று தோன்றிய வேதம்

(A) யஜூர் வேதம்
(B) சாம வேதம்
(C) அதர்வண வேதம்
(D) ருக் வேதம்

162. உள்ளது போகாது இல்லது வாராது என்று கூறும் வாதம்

(A) பிரதிபிம்ப வாதம்
(B) நிமித்த காரண பரிநாம வாதம்
(C) ஸத்காரியவாதம்
(D) பரிணாம வாதம்

163. ஆன்மா இருள் மலத்தில் அமுந்திக்கிக்கிறது எனும் கோட்பாடு உள்ள சமயம்

(A) சைவ சித்தாந்தம்
(B) வசிஷ்டாத்வைதம்
(C) அத்வைதம்
(D) துவைதம்

164. சக்தியிலிருந்து சிவம் பிரிக்க முடியாத வகையில் கலந்திருக்கிறது என்று கூறும் சமயம்

(A) சாகிதம்
(B) கௌமாரம்
(C) சைவம்
(D) காணபத்தியம்

165. சதசத்து என்று குறிப்பிடப்படுவது

(A) சிவன்
(B) உயிர்
(C) உலகம்
(D) மாயை

166. ஆன்மாக்களில் மூன்றுமலம் உடையவர் பின்வருமாறு அழைக்கப்படுவர்

(A) சகலர்
(B) பிரளயாகலர்
(C) விஞ்ஞாகைலர்
(D) நிஷ்கலர்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

167. பேயுருவங் கொண்டு கயிலை மலையை தலையால் நடந்தேறிய சிவ தொண்டர்

(A) திருத் தொண்டர்

(B) காரைக்கால் அம்மையார்

(C) சண்டேசுவர நாயினார்

(D) நந்தனார்

168. சுந்தரமூர்த்தி நாயனாரால் தொகுக்கப்பட்ட பதிகத்தின் பெயர்

(A) சிவஞான போதம்

(B) திருத்தொண்டத் தொகை

(C) நாளாயிர திவ்யபிரபந்தம்

(D) திருவாய் மொழி

169. திருவாசகத்தை அருளியவர்

(A) மாணிக்கவாசகர்

(B) சுந்தரர்

(C) அப்பர்

(D) சம்பந்தர்

170. ஆகாமிய கர்மம் என்பதின் பொருள் யாது?

(A) போதுதிடை வினை

(B) எதிர் வினை

(C) நுகர் வினை

(D) நல் வினை

171. கீழ்வரும் வாக்கியங்களை ஆராயவும்

1. சைவம் என்பது சிவசம்பந்தம் உடையது எனப் பொருள்படும்.

2. சைவம் என்பது ஆகமசம்பந்தம் உடையது எனப் பொருள்படும்.

இதில் எது சரி?

(A) 1 மட்டும் சரி

(B) 2 மட்டும் சரி

(C) 1ம் 2ம் சரி

(D) 1ம் 2ம்சரியில்லை



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

172. தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் இயற்பெயர்

(A) திருநாராயணர்
(B) விப்பிரநாராயணர்
(C) சந்தோஷர்
(D) திவ்விய நாராயணர்

173. "திருக்கண்டேன்! பொன்மேனி கண்டேன்" என்று திருமாலைப் பாடிய ஆழ்வார்

(A) பேயாழ்வார்
(B) திருமங்கை ஆழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) பூதத்தாழ்வார்

174. வைணவ வடகலைப் பிரிவினை தோற்றுவித்தவர்

(A) வேதாந்த தேசிகர்
(B) ராமானுஜர்
(C) பிள்ளை லோகாச்சாரியார்
(D) மணவாள மாமுனிகள்

175. "மாலும் சிவனும் ஒன்று" என்று மதநல்லிணக்கம் கண்ட ஆழ்வார்

(A) பொய்கையாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) திருமழிசை ஆழ்வார்
(D) மதுரகவி ஆழ்வார்

176. திருமலையில் அவதரித்த ஆழ்வார்

(A) நம்மாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) பொய்கையாழ்வார்
(D) தொண்டரடி பொடியாழ்வார்

177. பாகவத புராணத்தின் கூறப்படும் முழுமுதற் கடவுள்

(A) சிவன்
(B) கணபதி
(C) முருகன்
(D) விஷ்ணு

178. மங்களா சாசனம் என குறிக்கப் பெறுவது

(A) சமயக் குரவர்களின் பாடல்கள்
(B) ஆழ்வார்களின் பாடல்கள்
(C) சந்தானக் குரவர்களின் பாடல்கள்
(D) நாயன்மார்களின் பாடல்கள்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

179. திருவாய் மொழி எனும் பிரபந்தத்தை வழங்கியவர்

(A) தொண்டரடிப் பொடியாழ்வார்

(B) பெரியாழ்வார்

(C) நம்மாழ்வார்

(D) திருப்பாணாழ்வார்

180. பட்டியல் I ல் உள்ள ஆழ்வார்களுடன் பட்டியல் II ல் உள்ள பிரபந்தங்களுடன் பொருத்துக

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| ஆழ்வார்கள் | | பிரபந்தங்கள் | |
| (a) | திருப்பாணாழ்வார் | 1. | திருப்பல்லாண்டு |
| (b) | பெரியாழ்வார் | 2. | திருப்பாவை |
| (c) | நம்மாழ்வார் | 3. | அமலனாதி பிரான் |
| (d) | ஆண்டாள் | 4. | திருவாசிரியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

181. சிறிது காலம் சைவத்தை பின்பற்றிய திருமழிசையாழ்வார் எந்த ஆழ்வாரின் பேரருளால் வைணவத்திற்கு மாறினார்

(A) பேயாழ்வார்

(B) நம்மாழ்வார்

(C) தொண்டரடிப் பொடியாழ்வார்

(D) திருப்பாணாழ்வார்

182. பெருமாள் கோயிலில் சொர்க்கவாசல் திறக்கப்படும் நாள்

(A) ஏகாதசி

(B) துவாதசி

(C) பிரதோஷம்

(D) வைகுண்ட ஏகாதசி



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

183. இராமானுஜரின் கருத்தின் படி அனைத்து பொருட்களும்

(A) மாயை

(B) அநிர்வசனியம்

(C) உண்மை

(D) மாயை மற்றும் உண்மை

184. அரதத்தர் எனும் சிவாச்சாரியார் எழுதிய நூல் எது?

(A) தேவாரம்

(B) சுருதி சூக்தமாலை

(C) திருவுந்தியார்

(D) சிவபிரகாசம்

185. இராமானுஜர் ஏற்று கொண்ட பிரமாணங்களின் எண்ணிக்கை

(A) ஒரு பிரமாணம்

(B) இரண்டு பிரமாணம்

(C) மூன்று பிரமாணம்

(D) நான்கு பிரமாணம்

186. பிள்ளைலோகாச்சாரியார் எழுதிய நூல்கள் அனைத்தும் சேர்த்து குறிக்கப்பெறும் சொல்

(A) அஷ்டாதச புராண

(B) அஷ்டாதச கர்மம்

(C) அஷ்டாதச ரகஸ்ய

(D) அஷ்டாதச குணம்

187. முப்பத்தியாராயிரப்படியை இவ்வாறு அழைக்கின்றனர்

(A) கோடு

(B) பாடு

(C) ஈடு

(D) கூடு

188. குருகேசர் இவ்வாறு அழைக்கப்படுகின்றார்

(A) ஆழ்வார்

(B) பிள்ளான்

(C) லோகாச்சாரி

(D) தேசிகர்


www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

189. கோயில் கருவறையின் தெற்கில் இருக்க வேண்டிய தெய்வம்

(A) லிங்கோத்பவர

(B) தெக்ஷிணாமூர்த்தி

(C) கார்த்திகேயன்

(D) விநாயகர்

190. முதல் மூன்று திருமுறைகளைத் தொகுத்தவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) மாணிக்கவாசகர்

(D) திருமூலர்

191. 'இந்து சமயத்தின் அடிப்படை நூல்'

(A) பகவத் கீதை

(B) இராமாயணம்

(C) மகாபாரதம்

(D) வேதம்

192. பட்டினத்தார் மரபு

(A) அந்தண மரபு

(B) வேளாள மரபு

(C) வைசிய மரபு

(D) சத்திரிய மரபு

193. சிவபெருமான் மன்மதனை எரித்த தலம்

(A) திருக்குறுக்கை

(B) சிதம்பரம்

(C) திருப்பறியலூர்

(D) திருவழுவூர்

194. சங்கராந்தி என கொண்டாடப்படும் விழா

(A) தீபாவளி பண்டிகை

(B) பொங்கல் பண்டிகை

(C) ஓணம் பண்டிகை

(D) ஆவணி அவிட்டம்



www.edubilla.com

Edubilla.com
Global Education Needz

195. எம்பெருமானார் ஞானசாரம் என்ற நூலை எழுதிய இராமானுஜரின் சீடர் பெயர்

(A) அருளாளப் பெருமாள்

(B) கேசவப் பெருமாள்

(C) மணவாளப் பெருமாள்

(D) கிருஷ்ண பெருமாள்

196. மணவாள மாமுனிகள் சார்ந்த பிரிவு

(A) வடகலை

(B) தென்கலை

(C) சாத்திரக்கலை

(D) சூத்திரக்கலை

197. பின்வருவனவற்றுள் தஞ்சமாம்பாள் என்பது யாருடைய மனைவியின் பெயர்?

(A) இராமானுஜரின் மனைவி

(B) யமுனாசார்யாவின் மனைவி

(C) மணவாளரின் மனைவி

(D) தேசிகரின் மனைவி

198. தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய ஒரே திவ்யதேசம்

(A) திருவரங்கம்

(B) திருப்பதி

(C) குணசீலம்

(D) காளகத்தி

199. பூதத்தாழ்வார் அவதரித்த இடம்

(A) திருக்கடல் மல்லை

(B) திருக்கடலூர்

(C) திருவாவின் குடி

(D) திருவரங்கம்

200. திருமாலிருஞ்சோலையில் பாடிய ஆழ்வார்கள்

(A) 6

(B) 5

(C) 3

(D) 4



www.edubilla.com